## September 17, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உத்தரகண்ட், ஹிமாசல பிரதேசத்தில் விடிய விடிய கொட்டித் தீர்த்த பலத்த மழையால் பெரு வெள்ளமும், நிலச்சரிவுகளும் ஏற்பட்டன. இந்த இயற்கைப் பேரிடர், இரு மாநிலங்களிலும் கடும் சேதத்தை விளைவித்துள்ளது.
    i. தம்சா, கங்கை, யமுனை ஆகிய நதிகளில் கரைபுரண்டு ஓடும் வெள்ளத்தில், பல பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டன. தம்சா நதிக்கரையில் உள்ள புகழ்பெற்ற தபகேஸ்வர் கோயிலை வெள்ளம் சூழ்ந்தது.
2. பாலாறு மாசு படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரி தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச் சநீதிமன்றம், இது தொடர்பாக ஒரு தணிக்கை குழுவை அமைத்து உத்தரவிட்டது.
    i. தமிழகத்தில் வேலூர், ராணிப்பேட்டை திருப்பத்தூர் உள்ளிட்ட மாவட்டங்கள் வழியாகச் செல்லும் பாலாற்றில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளால் கடும் மாசு ஏற்பட்டுள்ளது.
    ii. எனவே, இந்தத் தொழிற்சாலைகளை மூட உத்தரவிடக் கோரியும், மாசுபாட்டைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் உச்சநீதி மன்றத்தில் வேலூர் சுற்றுச்சூழல் கண்காணிப்புக்குழு சார்பில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.
    iii. இதை விசாரித்த உச்சநீதிமன்றம், பாலாறு மாசுபடுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு பல்வேறு வழிகாட்டுதல்களுடன் கடந்த ஜனவரி 30-ஆம் தேதி உத்தரவு பிறப்பித்தது.
    iv. ஆனால், அந்த உத்தரவு முறையாகப் பின்பற்றப்படவில்லை என அதிருப்தி தெரிவித்த உச்சநீதிமன்றம், பாலாறு மாசுபாடு விவகாரத்தில் வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர்கள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகுமாறு உத்தரவிட்டது.
    v. இதையடுத்து, பாலாறு மாசுபாடு குறித்து தணிக்கை செய்ய ஒரு குழுவை அமைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.
    vi. ஐஐடி சென்னையைச் சேர்ந்த இரண்டு நிபுணர்கள், சுற்றுச்சூ ழல்ழல் அறிஞர் நாகராஜன் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. 6 மாதங்களில் இந்தக் குழு பாலாறு மாசுபாடு குறித்த தணிக்கை செய்து அறிக்கை தாக்கல் செய்யவும் நீதிபதிகள் உத்தர விட்டனர்.
    vii. முதல் அறிக்கையைப் பார்த்த பிறகு, அடுத்த ஆய்வை எவ்வளவு கால இடைவெளியில் மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் எனவும் நீதிபதிகள் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து வழக்கு விசாரணையை 6 மாதங்களுக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.
3. இந்தோனேசியா, மலேசியா ஆகியவை இந்தியாவின் முக்கிய பாமாயில் விநியோக நாடுகள் ஆகும். ஆர்ஜென்டீனா, பிரேஸில், ரஷியா ஆகிய நாடுகளில் இருந்து சோயா எண்ணெய்யையும், ரஷியா, உக்ரைன் ஆகியவற்றில் இருந்து சூரியகாந்தி எண்ணெய்யையும் இந்தியா அதிக அளவில் இறக்குமதி செய்கிறது.
4. விண்வெளி, எண்ம தொழில்நுட்பத் துறைகளில் மோரீஷஸ் நாட்டுடனான நல்லுறவு விரிவாக்கம் அடைந்து வருகிறது என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.
    i. இந்தியாவில் கடந்த 9-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரையில் மோரீஷஸ் பிரதமர் நவீன்சந்திர ராம்கூலம் அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.
    ii. தில்லியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை மோரீஷஸ் பிரதமர் ராம்கூலம் சந்தித்தார். இந்தியா-மோரீஷஸ்இடையேயான நல்லுறவு அனைத்து துறைகளிலும் சீராக வலுவடைந்து வருகிறது. இது தற்போது உத்திசார்

கூட்டணி வரையில் வளர்ச்சிய டைந்துள்ளது.

5. ரஷியாவில் இருந்து ஜெர்மனிக்கு எரிவாயு வழங்கும் நார்த் ஸ்ட்ரீம் கடலடி குழாய்களை வெடிவைத்து தகர்த்ததாக சந்தேகிக்கப்பட்டு கடந்த மாதம் கைது செய்யப்பட்ட, உக்ரைன் நாட்டைச் சேர்ந்த செர்ஹீ குஸ்னியெட்ஸோவை ஜெர்மனிக்கு நாடு கடத்த இத்தாலிய மேல் முறையீட்டு நீதிமன்றம் ஒப்புதல் அளித்தது.
    i. ரஷியாவிடம் இருந்து எரிவாயு வாங்க வேண்டாம் என்று ஐரோப் பிய நாடுகளை உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி வலியு றுத்திவந்தசூழலில்,2022செப்.26-இல் பால்டிக் கடலுக்கு அடியில் உள்ள நார்த் ஸ்ட்ரீம் குழாய்களில் திடீர் கசிவு ஏற்பட்டது. அது வெடிவைத்து தகர்க் கப்பட்டதாக பின்னர் விசாரணையில் தெரியவந்தது.
6. உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற ஃபிடே கிராண்ட் ஸ்விஸ் செஸ் போட்டியின் மகளிர் பிரிவில் நடப்பு சாம்பியனாக களம் கண்ட வைஷாலி, இந்த முறையும் வெற்றி வாகை சூடினார்.
    i. பிரதான போட்டிகளில் மகளிர் பிரிவில் அடுத்தடுத்து சாம்பியன் கோப்பை வென்ற முதல் போட்டியாளராக அவர் சாதனை படைத்தார். மேலும், இந்த வெற்றியின் மூலமாக அடுத்த ஆண்டு கேண்டி டேட்ஸ் செஸ் போட்டிக்கும் அவர் தகுதிபெற்றார்.
7. தமிழகத்தில் கடந்த 1989-ஆம் ஆண்டு முதல் விவசா யத்துக்கான இலவச மின்சார திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
    i. இதற்காக மின்வாரியத்துக்கு ஏற்படும் செல்வை தமிழக அரசு ஆண்டுதோறும் மானியமாக வழங்கி வருகிறது.
    ii. கடந்த 10 ஆண்டுகளாக பல லட்சம் விவசாயிகள் இலவச மின்இணைப்புக்கு விண்ணப்பித்து காத்திருந்தனர்.
    iii. இதனையடுத்து கடந்த 2021-இல் விவசாய மின் இணைப்புகள் வழங்கும் பணி தொடங்கியது. கடந்த 4 ஆண்டுகளில் 2 லட்சத்துக்கும் அதிகமான மின் இணைப் புகள் வழங்கப்பட்டுள்ளன.
    iv. இதனிடையே, மின்வாரியம் கடும் நிதிநெருக்கடியை சந்தித்து வந்ததால், விவசாய மின்இணைப்புகள் வழங்குவதில் மீண்டும் தாமத நிலை ஏற்பட்டது. நிலுவையில் உள்ள விவசாய மின் இணைப்புகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மின்வாரியம் மேற்கொண்டு வந்த நிலையில், இப்போது 50,000 விவசாய மின் இணைப்புகள் வழங்க தமிழக அரசு அனுமதி வழங் கியுள்ளது.
8. தமிழகத்தில் புதிதாக அமைக்கப்பட உள்ள 18 தொழிற்பேட்டைகளுக்கு முதல் வர் மு.கஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். மேலும் புதிதாக அமைக்கப்பட்ட 4 தொழிற்பேட்டைகளை அவர் திறந்து வைத்தார்.
    i. திருவள்ளூர் மாவட்டம் காவேரிராஜபுரம், திருநெல்வேலி மாவட்டம் முத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் கடம்பாடி கிராமம், திருவாரூர் மாவட்டம் கொருக்கை ஆகிய 4 இடங்களில் புதிதாக தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழகத்தில் 5,200 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.
    i. பிரான்ஸ் நாட்டின் வால் டி லாயர் மாகாணத்துடன் கலாசாரம், சுற்றுலா மேம்பாட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் கையொப்பமானது. இந்த ஒப்பந்தம் மூலமாக பிரான்ஸ் மற்றும் தமிழ்நாட்டுக்கு இடையே கலைஞர்களின் பரிமாற்றம் எளிதாக்கப்படும். கலைஞர்கள், கலை நிறுவனங்கள், கலாசார நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படும்.